1970 ஆகஸ்ட் 27]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை தாமதமாக செயல்பட்டு வருகிறது என்பது உண்மைதான். கையாடல் என்று யாரோ ஒருவர், சிப்பந்தியோ அல்லது கணக்காயரோ, சொன்னால் சட்டென்று உடனே நடவடிக்கை எடுக்க முடிவதில்லை. முதலில் விசாரணை செய்த பிறகு சார்ஜ் செய்ய வேண்டும், பிறகு டிபார்ட்மெண்டிலிருந்து போலீசுக்கு ரிப்போர்ட் செய்ய வேண்டும். பிறகு போலிசில் நடவடிக்கை எடுக்கவேண்டும். இப்படிப் பல கட்டங்களைத் தாண்ட வேண்டியதால், பல ஆண்டுகள் ஆகிவிடுகின்றன. இந்த டிபார்ட்மெண்டிலேயே நடவடிக்கை எடுப்பதற்கு ஒரு தனி போலீஸ் அமைப்பது பற்றி அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

திரு. கே. விநாயகம்: தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்ட கோவாப்ரேடிவ் சப்ளை மார்க்கெட்டிங் நிறுவனத்தின் ஆரணிக் கிளை மாத்திரமே கையாடல் செய்து இருக்கிறதா? மற்ற பிராஞ்சுகளை அந்த அதிகாரிகள் தணிக்கை செய்தார்களா? அப்படியென்றால் அதனுடைய விளக்கம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: மற்றக் கிளைகளைப் பற்றிய தவறுகள், நேர்மை நடந்தை பற்றிய குறிப்புகளோ தகவல்களோ என்னிடம் இல்லை. அது பற்றித் தனிக் கேள்வி போட்டால் தகுந்த தகவல் அளிக்கத் தயாராயிருக்கிறேன்.

முன் இணைவு வீடுகள் கட்டுவதற்கான சாதனங்கள்.

* 83 **வினா.—திரு. டி. மார்டின்:** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் ரெடிமேடு வீடுகள் கட்டுவதற்கு வேண்டிய சாதனங்களை கொடுத்து உதவ ரஷியா நாடு தற்சமயம் முன்வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு கே. வி. சுப்பையா: (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. டி. மார்டின்: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் அதிகாரிகள் பங்களாக்களைச் சொந்தம் ஆக வைத்திருந்தாலும் கூட, அந்த பங்களாக்களில் குடியிருக்க முடியாமல் குறைந்த வாடகைக்கு அக்கமொடேஷன் கன்ட்ரோலில் குடியிருந்து கொண்டு . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ரஷ்ய பணம் கொடுத்ததற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?

திரு. டி. மார்டின்: Therefore . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'Therefore வேண்டியதில்லை. முன்னுரை வேண்டியதில்லை. முன்னுரைக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? கேள்வி நேரத்திலே குற்றம் சாட்டக் கூடாது.

திரு. டி. மார்டின் : குற்றம் சாட்டவில்லை. Sir, I will put the question in English.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆங்கிலத்தில் பேசினால் மட்டும் என்ன?

THIRU T. MARTIN : Sir, on account of want of accommodation in the City of Madras, even though our Government servants own bungalows in Madras, they are now unfortunatelyliving in the bungalows coming under the jurisdiction of the Accommodation Controller. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப்பகுதியை நான் அனுமதிக்கவில்லை மூலக் கேள்வியை யொட்டி துணைக் கேள்வி ஏதாவது போட வேண்டுமென்றால், போடுங்கள்.

THIRU T. MARTIN : Mr. Speaker, Sir, taking into consideration the scarcity of houses in the City of Madras will the Government construct houses for allotment. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதோடு நிறுத்துங்கள். அந்தப் பகுதிவரைக்கும் ஆன்சர் பண்ணுங்கள்.

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பிரிஃபேப்ரிகேட் வீடுகளைப்பற்றிக் கேள்வி கேட்டார்கள். இது மூலக் கேள்வியை விட்டு எங்கேயோ சென்று கொண்டிருக்கிறது என்று எண்ணுகிறேன். பிரிஃபேபிரிகேடட் வீடுகள் கட்டுவது சம்பந்தமாக ரஷ்ய அரசாங்கத்தின் துணைகொண்டு பரிந்துரை செய்யப்பட்டு ஹவுசிங் போர்டு சேர்மன் அவர்கள் கூட கையெழுத்திட்டுவிட்டார்கள். ஆனால் அதைக் கட்டினால் லாபம் கிடைக்காது என்று முடிவு செய்திருக்கிறார்கள்.

It was found that the capital cost of the plant including import duty and handling charges, site, building, etc. woul come to Rs. 400 lakhs, an annual expenditure including concrete, steel, salaries, transport etc. costing Rs. 125 lakhs, besides the cost of doors, windows etc. which would come to about Rs. 2½ crores more and an amount to the tune of about Rs. 4 crores for the maintenance of the plant. Therefore, it has been deferred for the present.

புலியூர் சிமெண்ட் தொழிற்சாலை தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதிகள்.

*30 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புலியூர் சிமெண்ட் தொழிற்சாலையில் தொழிலாளர்களுக்காக நிரந்தர மருத்துவ வசதி செய்யப்பட்டுள்ளதா?